**சுருக்கம்**

திட்டங்கள் – அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – 2009–2010–ல் செயல்படுத்துதல் – அரசு மான்ய தொகையான ரூ.25.00 கோடியில் முதல் கட்டமாக ரூ.12.50 கோடி மட்டும் விடுவிக்கப்பட்டது – மீதமுள்ள தொகை ரூ.12.50 கோடி விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை**

**அரசாணை(நிலை) எண். 01** **நாள்:05.01.2010**

**மார்கழி 21, திருவள்ளுவர் ஆண்டு 2040**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 06.07.2007.
2. அரசாணை (நிலை) எண்.162, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை, நாள் 11.09.2009.
3. பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2627 / 2009 / உ3 நாள் 08.11.2009.

* * * * *

**ஆணை:**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008 முதல் 2010–2011 வரையிலான நான்காண்டு காலத்தில் 561 பேரூராட்சிகளில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தவும், இத்திட்டத்திற்கு பிறவகை நிதி ஆதாரங்களுடன் ஒவ்வோராண்டும் ரூ.25.00 கோடி அரசு மான்யமாக வழங்கவும் ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன. மேற்படி அரசாணையின் அடிப்படையில் 2009–2010ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் (B.E) ரூ. 25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்திற்கு நடப்பாண்டுக்கான அரசு மான்யம் ரூ.25.00 கோடியில் 50% தொகையான ரூ.12.50 கோடி மட்டும் முதல் மற்றும் இரண்டாவது காலாண்டு தவணைகளாக விடுவிக்கப்பட்டது.

3. பார்வை மூன்றில் காணும் பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதத்தில், 2009–2010–ம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள 140 பேரூராட்சிகளிலும் மொத்தம் ரூ.83.41 கோடி மதிப்பீட்டில் 1314 பணிகள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட 1314 பணிகளில் இதுவரை 316 பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள 998 பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன என்றும் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தையும் 31.03.2010க்குள் முடிக்க அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்களுக்கும் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சிகளின் இயக்குநர், அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நடப்பாண்டில் வழங்கப்பட வேண்டிய அரசு மான்யத்தின் ரூ.25.00 கோடியில் மீதமுள்ள தொகையான ரூ.12.50 கோடியினை விடுவித்து ஆணை வெளியிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பேரூராட்சிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்த நடப்பு (2009–2010) நிதியாண்டிற்கான அரசு மானிய ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.25.00 கோடியில் மீதமுள்ள 50% அதாவது ரூ.12.50 கோடி (ரூபாய் பன்னிரெண்டு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்) மூன்றாவது மற்றும் நான்காவது காலாண்டு தவணைகளாக விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

5.மேற்காணும் செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:

**<u>1. ரூ.2,50,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே ஐம்பது லட்சம் மட்டும்)</u>**

"4515 00 ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –II மாநிலத் திட்டம் – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – JC சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–16, பெரும் பணிகள்" ( 4515 00 789 JC 1604)

**<u>2. ரூ.10,00,00,000/– (ரூபாய் பத்து கோடி மட்டும்)</u>**

"4515 00 ஊரக வளர்ச்சி திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு –II மாநிலத் திட்டம் – 800 ஏனைய செலவு – JR அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–16 பெரும் பணிகள்" ( 4515 00 800 JR 1608)

6. மேலே பத்தி ஐந்தில் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று சம்பந்தப்பட்ட பேரூராட்சிகளுக்கு பிரித்து வழங்கும்படி பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து காலாண்டு அறிக்கை ஒன்றினை பேரூராட்சிகளின் இயக்குநர் அரசுக்கு அனுப்புதல் வேண்டும்.

8.இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 72490/M.A.&W.S./09 நாள் 18.12.2009–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி
அரசு செயலாளர்.

**பெறுநர்**
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–108.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்
ஆணையாளர், கரூவூல கணக்கு, சென்னை 35
மாநில தலைமை கணக்காயர், சென்னை 18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை–1.

<u>நகல்:</u>
செயலரின் தனி செயலர், ந.நி(ம)கு.வ.துறை, சென்னை–9
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை–9
நிதி (ந.நி (ம) கு.வ/ நிகு IV /வழிவகை 1) துறை, சென்னை–9.
உதிரி/நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது./

பிரிவு அலுவலர்.